FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313293

1. District : Tirupathur PS: V & AC Year: 2026 FIR No.: 10/2026 Date: 24-10-2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Act, 1988 (as amended in 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: by Act 16 of 2018) Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : January 2026 Date to : October 2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 24-10-2026 Time : 14.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 24-10-2026 Time : 14.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-VI [1479800] நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the District Health office, Tirupathur 2 km South west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. S. Nandakumar (b) Father's/ Husband's Name : Sivanandam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 55 yrs (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Senior Revenue Inspector (g) Address : Inspection Cell office, Collectorate, Vellore
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Thiru L. Rajini, aged 42, S/o Loganathan, Superintendent, Government Health Centre, Pachur, Natrampalli Taluk, Tirupathur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Does not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Does not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Does not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தற்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/10/26

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24/10/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24-10-2026 at 16:00 hrs

Name: பெயர் B. GOWRI
Rank: நிலை Inspector of Police, No. எண் V & AC, Tirupathur

Attachment for Column No.12 of the First Information Report in Tirupathur Vigilance and Anti-Corruption, Cr.No.10/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018).

பணிந்தனுப்பப்படுகிறது.

இன்று (24.10.2026) மதியம் 14.30 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்தபோது, திரு.S.நந்தகுமார், ஆய்வுக் குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகாரில் குறிப்பிட்டிருந்த நபர் மீது திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் 10/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018) யின்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனு விவரம் பின்வருமாறு:- 24.10.2026 அனுப்புநர், திரு.S.நந்தகுமார், ஆய்வுக் குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. கைப்பேசி எண்-9488646949 பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பத்தூர் மாவட்டம். அம்மா, நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கான ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நேற்று (23.10.2026) பணியில் இருந்தபோது, திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளருக்கு கிடைத்த நம்பகமான இரகசியத் தகவலின்படி, திருப்பத்தூர் மாவட்ட சுகாதார அலுவலகத்தில், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொள்முதல், அரசு நிதி மற்றும் சுகாதாரத் திட்டச் செலவுகள் ஆகியவற்றில் முறைகேடு செய்து லஞ்சம் பெறுவதாக கிடைத்த தகவலை எனக்கு தெரிவித்ததன் பேரில் நானும், திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி B. கௌரி மற்றும் காவல் குழுவினருடன் பிற்பகல் 15.15 மணியளவில் அலுவலகத்திற்குச் சென்று மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர்

N.கலுசிவலிங்கம், MBBS, DPH, MD, அவர்களிடம் இருதுறை திடீர் கூட்டுச் சோதனை மேற்கொள்ள வந்த தகவல் தெரிவிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டது. பின்னர், பொது பிரிவு அலுவலகத்திற்குச் சென்று நிர்வாக அலுவலர் திரு. முருகேசன் அவர்களிடம் தகவல் தெரிவித்து, அங்கு பணியிலிருந்த அனைத்து அலுவலர்களையும் வரவழைத்து தனித்தனியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது, அவர்களிடம் சந்தேகத்திற்குரிய பொருட்கள் அல்லது பணப் பரிவர்த்தனைகள் எதுவும் கண்டறியப்படவில்லை. அதனைத்தொடர்ந்து, நிர்வாக அலுவலர் (Administrative Officer) திரு.M.முருகேசன் அவர்களின் கைப்பேசியைச் சரிபார்த்தபோது பல பணப் பரிவர்த்தனைகள் இருந்தது தெரியவந்தது. அவை கடனாகப் பெற்ற பணத்தைத் திரும்பச் செலுத்திய பரிவர்த்தனைகள் என அவர் தெரிவித்தார். பின்னர், திரு.லோ.ரஜினி, வயது 42, தந்தை பெயர் லோகநாதன், கண்காணிப்பாளர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பச்சூர், நாட்றம்பள்ளி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம் என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி கடந்த 19.11.1998 அன்று மருத்துவமனைப் பணியாளராகப் பணியில் சேர்ந்து, படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று, 01.08.2026 முதல் பச்சூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிவதாகவும், அதற்கு முன்பு மூன்று ஆண்டுகள் திருப்பத்தூர் மாவட்ட சுகாதார அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்ததாகவும் மேலும், AEBAS புதிய மென்பொருள் மூலம் வருகைப் பதிவு பராமரிப்பது தொடர்பான கலந்தாய்வு நடைபெறுவதால், தான் மாவட்ட சுகாதார அலுவலகத்திற்கு வந்ததாகக் கூறினார். அவரது அனுமதியுடன், அவரது கைப்பேசி எண் 9894921037-இல் உள்ள Google Pay மற்றும் PhonePe பணப் பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, முதலில் PhonePe பயன்படுத்துவதில்லை எனத் தெரிவித்த அவர், பின்னர் அவரது கைப்பேசியில் அச்செயலி இருப்பது தெரியவந்தது. மேலும், 2026 ஆகஸ்ட் மாதத்தில் ரூ.48,400/-, செப்டம்பர் மாதத்தில் ரூ.83,900/- மற்றும் அக்டோபர் மாதத்தில் ரூ.20,101/- என அதிக அளவிலான பணப் பரிவர்த்தனைகள்

நடைபெற்றிருந்தன. மேலும், Care well Sathish என்பவரிடமிருந்து 2026 ஜனவரி மாதத்தில் ரூ.20,000/-, பிப்ரவரி மாதத்தில் ரூ.21,500/- மார்ச் மாதத்தில் ரூ.19,000/- மற்றும் ஜூன் மாதத்தில் ரூ.10,000/- எனப் பணம் பெறப்பட்டிருந்தது. அதேபோல், முத்துராஜ் என்பவரிடமிருந்து செப்டம்பர் மாதத்தில் ரூ.20,000/- மற்றும் அக்டோபர் மாதத்தில் ரூ.10,000/- பெறப்பட்டிருந்தது. முத்துராஜ் யார் என விசாரித்தபோது, அவரைப் பற்றி நினைவில்லை என ரஜினி தெரிவித்தார். Care well Sathish தொடர்பான WhatsApp ஆய்வு செய்ததில், பணப் பரிவர்த்தனைகள் இருந்தது. சதீஷ் மருத்துவப் பொருட்களை வழங்கும் நிறுவனத்தின் மேலாளர் என்றும் அவரது நிறுவன முகவரி M/s Surgical Mart, No.25/3, Raja Gardens, Porur Link Road, Tollgate Bypass, Main Rd, Devi Parasakthi Nagar, Porur, Vanagaram, Chennai என்றும் தெரியவந்தது. இதுகுறித்து ரஜினியிடம் விசாரித்தபோது, சதீஷிடமிருந்து கடனாகப் பணம் பெற்றதாகத் தெரிவித்தார். ஆனால், சதீஷிடம் பிற்பகல் 4.31 மணியளவில் தொலைபேசியில் விசாரித்தபோது, தான் மருத்துவப் பொருட்களைச் சுகாதார அலுவலகத்திற்கு வழங்கும் முகவர் எனத் தெரிவித்ததுடன், ரஜினிக்கு எந்தப் பணமும் அனுப்பவில்லை என மறுத்தார். எனவே, திரு.ரஜினியின் பணப் பரிவர்த்தனைகள், அவர் அளித்த விளக்கங்கள் மற்றும் தொடர்புடைய நபர்களின் பதில்களில் முரண்பாடுகளுடன் உள்ளதால் மேற்படி பணம் ரூ.1,00,500/- அது இலஞ்ச பணமாக இருக்கலாம் என்று சந்தேகப்படும்படியாக இருந்தது. மேலும், சந்தேகத்திற்கிடமான வங்கிப் பரிவர்த்தனைகளை மேற்கொண்டிருந்த கண்காணிப்பாளர் திரு. ரஜினி அவர்களிடம், வங்கிப் பரிவர்த்தனைகள் தொடர்பாக விளக்கக் கடிதம் பெறப்பட்டு மேற்படி இருதுறை திடீர் கூட்டுச் சோதனையானது 23.10.2026 ஆம் தேதி பிற்பகல் 3.15 மணிக்குத் தொடங்கி, இரவு 8.30 மணிக்கு நிறைவடைந்தது. சோதனை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட மகஜரின் நகல், மாவட்ட சுகாதார அலுவலர் திரு.N.கலுசிவலிங்கம் மற்றும் கண்காணிப்பாளர் திரு.ரஜினி ஆகியோருக்கு உரிய ஒப்புதலுடன் வழங்கப்பட்டது. மேற்படி சோதனையின்போது, கண்காணிப்பாளர் திரு.ரஜினி அவர்களின் வங்கிப் பரிவர்த்தனைகளில்

சந்தேகத்திற்கிடமான பண விவரங்கள் கண்டறியப்பட்டதால், அத்தொகை இலஞ்ச பணமாக இருக்கலாம் என்று நம்பும்படியாக உள்ளது. எனவே, சோதனையில் சந்தேகத்திற்கிடமான ரூ.1,00,500/- பணப் பரிவர்த்தனை விவரங்கள் பதிவு செய்யப்பட்ட இருதுறை தீடீர் கூட்டு சோதனை மகஜர் மற்றும் சம்பந்தப்பட்டவரின் விளக்கக் கடிதம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். இது சம்மந்தமாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd) திரு.S.நந்தகுமார் 24.10.2026 ஆய்வுக்குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர்.9 Sir, Received the complaint on 24.10.2026 at 14.30 hrs and registering a case in Tirupathur V&AC Crime No.10/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018). (Sd) B.Gowri. 24.10.2026 Inspector of Police, V&AC, Tirupathur.

The original FIR is submitted to the Hon'ble District and Sessions Judge, Tirupathur along with original complaint petition, original Proceedings prepared for Joint Surprise Check conducted on 23.10.2026 and original explanation letter, dated 23.10.2026, given by Tr.L.Rajini, and the copies are sent to the officers concerned.

24/10/2026
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur